மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் அறிவியல் மையத்தில் வேலை வாய்ப்புகளை அள்ளித்தரும் மேம்படுத்தப்பட்ட எம்.எஸ்.ஸி சுற்றுச்சூழல் படிப்புக்கு அட்மிசன் நடைபெறுகிறது.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், ஆழ்வார்குறிச்சி ஸ்ரீ பரம கல்யாணி சுற்றுச்சூழல் அறிவியல் ஒப்புயர்வு மையத்தில் அனைத்து அறிவியல் பட்டதாரி மாணவர்களுக்காக இரண்டு வருட எம்.எஸ்.ஸி சுற்றுச்சூழல் அறிவியல் முற்றிலும் மேம்படுத்தப்பட்ட படிப்புகள் மிகவும் குறைந்த கல்விக் கட்டணத்தில் நடைபெறுகிறது.

ஆழ்வார்குறிச்சி சுற்றுச்சூழல் மையத்தில் சுற்றுச்சூழல் சார்ந்த பல்வேறு “பட்டமேற்படிப்புகள்” நெல்லைப் பல்கலைக்கழகத்தால் நடத்தப் பட்டு வருகிறது. அனைத்து அறிவியல் பாடங்களில் பட்டம் பெற்ற மாணவர்களுக்காக இரண்டு வருட சுற்றுச்சூழல் அறிவியல் பட்ட மேற்படிப்பு பாடம் முற்றிலும் மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டத்துடன் நடத்தப்படுகிறது. இப்படிப்பில் சேர்வதற்கு அட்மிஷன் நடைபெறுகிறது என்று பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் டாக்டர்.ஜான்டிபிரிட்டோகூறினார்.

தற்போது சுற்றுச்சூழல் சார்ந்த துறைகளில் வேலை வாய்ப்புகள் பெருகி வருவதால் மாசுக்கட்டுப்பாடு, நச்சுவியல், இயற்கை வளங்கள், தட்பவெட்பம், புவி வெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாற்றம், கழிவு மேலாண்மை, வனஉயிர்ப் பாதுகாப்பு, மரபு சாரா எரி சக்தி, கழிவு மறு சுழற்சி, நானோ தொழில்நுட்பம், கரியமில வாயு சேகரம், சூழல் தாக்க மதிப்பீடு, தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலும்தொடர்பியலும் போன்ற நூதனமான பாடங்கள் சேர்க்கப்பட்டு உயர் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. மேலும் படிப்பின் இடையே களஆய்வுகளும் தொழிற்சாலைகளில் நேரடியாக பயிற்சி பெரும் வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன. தகுதியுள்ள மாணவர்களுக்கு அரசின் உதவித் தொகை வழங்கப்படுகிறது. தற்போது, அனைத்து கல்லூரிகளிலும் சுற்றுச்சூழல் பாடத்தினை நடத்துவதற்காக சுற்றுச்சூழல் அறிவியல்

இம்மையம் மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து சுமார் 5 கி.மீ தொலைவில் கடனா நதிக்கு அருகாமையில் ரம்மியாமான சூழலில் அமைப்பெற்றுள்ளது. ஆழ்வார்குறிச்சியை பிறப்பிடமாகக் கொண்ட சென்னை அமால்கமேசன் குழும நிறுவன 100 ஏக்கர் நிலம் மற்றும் பல கட்டடங்களை நன்கொடையாக வழங்கி இம்மையம் வளர உறுததுணை புரிந்துள்ளது. தற்போது வெள்ளிவிழா கொண்டாடும் இம்மையத்தில் உயர்ந்த ஆராய்ச்சி சாதனங்கள், ஆய்வகங்கள், பசுமைக் குடில், விலங்கு சோதனை நிலையம், பெரிய நூலகம், மியூசியம், தாவர ஆவணக் காப்பகம், கள ஆய்வு வசதிகள் மற்றும் விளையாட்டு வசதிகள் உள்ளன.

இப்படிப்பினை முடித்த மாணவர்கள் மத்திய, மாநில அரசின் சுற்றுச்சூழல் துறைகள், மாசுக்கட்டுப்பாட்டு துறைகள், வனத்துறை, சூழல் தாக்க மதிப்பீட்டாளர், சூழல் விஞ்ஞானிகள், சூழல் பாதுகாப்பாளர், நானோ மெடிசின் மற்றும் அரசு சாரா துறைகள் உள்ளிட்ட துறைகளில் வேலை வாய்ப்பு பெறலாம்.

ஆழ்வார்குறிச்சி சுற்றுச்சூழல் மையத்தில் விசாலமான ஆராய்ச்சிக்கூடங்கள், நவீன உபகரணங்கள், மிகப்பெரிய நூலகம் மற்றும் காணொளி காட்சிகள் மூலம் கல்வி கற்கும் வசதிகளுடன் அமையப் பெற்றுள்ளது. இந்த வருடம் வெள்ளி விழாவை கொண்டாடும் இம்மையத்தில் எம்.எஸ்.ஸி மற்றும் டாக்டர் பட்டம் பெற்று நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியர் இந்தியாவிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் சிறப்பாக பணியாற்றி பெருமை சேர்த்து வருகின்றனர். இம்மையத்தின் வளர்ச்சிக்காக பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் அறிவியல் தொழில்நுட்பத் துரையின் பேரு நிதிகள் வழங்கப்பட்டு தமிழ்நாடு அரசு “சென்டர் ஆப் எக்ஸ்செலன்ஸ்” எனும் உயர்தகுதியை மாநிலத்திலேயே சுற்றுச்சூழல் துறைக்கென இம்மையத்திற்கு மட்டும் வழங்கி பெருமைப் படுத்தியுள்ளது. இம்மையத்தின் பேராசிரியர்கள் மத்திய மாநில அரசுகளின் பல்வேறு துறைகளின் நிதி உதவியுடன் ஆராய்ச்சி திட்டங்களை செயல்படுத்தியதுடன் பல்வேறு மாநில மற்றும் தேசிய விருதுகளைப் பெற்று சிறப்பிக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் துறை, சிறந்த சுற்றுச்சூழல் கல்வி நிறுவனத்திற்கான உயர் விருதினை இம்மையத்திற்கு வழங்கியது.

இரண்டு வருட சுற்றுச்சூழல் எம்.எஸ்.ஸி படிப்பில், பி.எஸ்.ஸியில் விலங்கியல், தாவரவியல், வேதியல், மைக்ரோபயாலாஜி, பயோகெமிஸ்ட்ரி, பயோடெக்னாலஜி பட்ட தாரிகள் சேரலாம். ஆர்வமுள்ள மாணவ, மாணவியர் பல்கலைக்கழக இணையதளத்தையும் (www.msuniv.ac.in) ஆழ்வார்குறிச்சி சுற்றுச்சூழல் மையத் தலைவரையும் அணுகலாம். அலை பேசி; +91 8754773353 என்று பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் டாக்டர்.ஜான் டி பிரிட்டோ தெரிவித்துள்ளார்.